மாவட்ட அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்

முன்னிலை - திருமதி ஜி.சுபத்திராதேவி, எம்.எல்.,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
கடலூர்.

*2026* ஆம் ஆண்டு மார்ச் திங்கள் *27* ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அமர்வு வழக்கு எண்.171/2022**
(TNCD 01-004147-2022)

(விருத்தாசலம் நீதித்துறை நடுவர் எண்.*2* அவர்களால் விசாரணைக்காக அனுப்பப்பட்ட முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.*120/2022*)
(மங்கலம்பேட்டை காவல் நிலைக் குற்ற எண்.*265/2018*)

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | : | **அரசுக்காக**<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>மங்கலம்பேட்டை காவல் நிலையக் குற்ற எண்.*265/2018*. |
| எதிரியின் பெயர் | : | ராஜீவ்காந்தி-*28*, த/பெ.ராஜேந்திரன்,<br>மெயின்ரோடு, எம்.பட்டி, விருத்தாசலம் தாலுக்கா. |
| எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்கள் | : | *1.* **திருடுதல் - இதச பிரிவு 379-ன் கீழ்**<br>அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி, சுயலாபம் கருதி டிப்பர் லாரியில் கள்ளத்தனமாக மணல் திருடியதன் பேரில் எதிரிகள் மீது இதச பிரிவு *379*-ன் கீழான குற்றச்சாட்டு.<br>*2.* **வேளாண்மைக்கான தண்ணீரைக் குறைப்பதற்கான சொத்து அழிப்பு - இதச பிரிவு 430-ன் கீழ்**<br>இயற்கை ஆதாரமான நீர் வளத்தை வழங்கும் கனிம வளமான மணலை திருடி அழிம்பு செய்ததின் பேரில், எதிரிகள் மீது இதச பிரிவு *430*-ன் கீழான குற்றச்சாட்டு. |
| எதிரியின் பதிலுரை | : | குற்றவாளி இல்லை |

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | : | எதிரி குற்றவாளி அல்லர் |
| நீதிமன்றத்தின் தீர்ப்பு | : | முடிவாக, எதிரியை இதச பிரிவுகள் 379 மற்றும் 430-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை பிரிவு 258(1) of BNSS-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி இவ்வழக்கில் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.<br><br>வழக்குச் சொத்தான இரட்டை மாட்டு டயர் வண்டியை எற்கனவே மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற உத்தரவு எண்.Writ Petition No.15704/2019 நாள் 10.06.2019-ந் தேதியிட்ட உத்தரவின்படி உரிமையாளருக்கு இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், அவரே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், இவ்வழக்கில் அவர் எழுதிக் கொடுத்த பிணைமுறி இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 1/2 யூனிட் மணல் ஏற்கனவே, வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி 1/2 யூனிட் மணலை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அரசுக்கு ஆதாயம் செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. |

## CASE SUMMARY

| | | |
|---|---|---|
| 1. | The period of remand of the accused | **Accused was remanded on 10.12.2018 and released on bail 13.12.2018.** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| 2 | Date of filing of the complaint/final report in the court | **Filing of Complaint** | **Filing of Final Report** | |
| | | 10.12.2018 | 31.12.2018 | |
| 3 | Date of Committal of the cases to the court of Sessions | 01.04.2022 | | |
| 4 | Date of Questioning of accused under section 228,240,246,251 of the Code of Criminal Procedure 1973/251, 263, 269, 274 of BNSS, as the case may be | 09.09.2025 | | |
| 5 | Filing of all miscellaneous petitions and their results on challenge before superior court; except routine petitions like petitions under section 317 of the code | Nil | | |
| 6 | Date of examination in chief and cross-examination of a witnesses | **Name of the Examination** | **Date of Chief** | **Date of Cross** |
| | | P.W.1 | 24.02.2026 | - |
| | | P.W.2 | 24.02.2026 | - |
| | | P.W.3 | 24.03.2026 | 24.03.2026 |

| | | | |
|---|---|---|---|
| 7 | Date of examination of the accused under section 313 of Cr.P.C. / 351 of BNSS | 27.03.2026 | |
| 8 | Details of abscondance of an accused and his appearance/production, the case may be; and | - | |
| 9 | Grant of stay by superior courts and the results there of | - | |

இவ்வழக்கு என் முன்பு *27.03.2026*-ந் தேதியன்று இறுதியான விசாரணைக்கு வந்து, அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.பி.பக்கிரி அவர்களும், எதிரியின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.என்.சுந்தரம் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இவ்வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

10.*12.2018*-ந் தேதி *06.45* மணிக்கு மங்கலம்பேட்டை காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட தெட்டிக்குப்பம் சுடுகாடு அருகில் உதவி ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் வாகன சோதனை செய்த போது எதிரி ராஜீவ்காந்தி, வயது *28*, த/பெ.ராஜேந்திரன் மெயின் ரோடு எம்.பட்டி,

விருத்தாசலம் தாலுக்கா என்பவர் டயர் மாட்டு வண்டியில் சுமார் 1/2 யூனிட் ஆற்று மணலை எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ பெறாமல் அரசுக்கு இழப்பு ஏற்படும் வகையிலும் இயற்கை வளம் மற்றம் சுற்று சூழல் சீர்கெடும் வகையிலும் நீர்பாசனத்திற்கு கேடு ஏற்படும் வகையிலும் தனக்கு லாபநோக்குடனும் திருட்டு தனமாக ஆற்றுமணலை திருடி குற்றம் புரிந்துள்ளதாக மங்கலம்பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரியின் மீது இதச பிரிவுகள் 379, 430 மற்றும் பிரிவு 21(1) Mines & Minerals Act 1957-ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி, விருத்தாசலம் நீதித்துறை நடுவர் எண்-2 நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தையும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

3. மேற்படி எதிரியின் மீது சொல்லப்பட்ட இதச பிரிவுகள் 379, 430 மற்றும் பிரிவு 21(1) Mines & Minerals Act-ன் கீழான குற்றமானது, மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமனற்ம் மதுரை கிளை முத்து - எதிர் - மாவட்ட ஆட்சியர் என்ற வழக்கில் பிறப்பித்த உத்தரவின்படியும், அரசாணை எண்.298 நாள் 13.06.2019-ன்படியும் இவ்வழக்கானது அதற்கான சிறப்பு நீதிமன்றமான முதன்மை மாவட்ட நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றம் என்பதால், இவ்வழக்கினை விருத்தாசலம் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்கள் மேல்விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு கு.வி.மு.ச. பிரிவு 209(அ)-ன் கீழ்

சமர்ப்பிக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.171/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

4. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், எதிரிக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டும், இருதரப்பும் கேட்கப்பட்டும், எதிரி மீது சொல்லப்பட்ட குற்றங்களுக்கான, குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதுமான அனுமானம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதவே, எதிரி மீது இதச பிரிவுகள் 379 மற்றும் 430-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, எதிரியிடம் விளக்கிக் கூறி வினவிய போது, எதிரி மேற்படி குற்றச்சாட்டுக்களை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1. முதல் அ.சா.3. வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1. முதல் அ.சா.ஆ.4 வரையான ஆவணங்களும், குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. **அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு...**

அ.சா.1. தென்எழிலன் தனது சாட்சியத்தில் தான் தற்போது வேப்பூர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்து வருகிறதாகவும், தான் மங்கலம்பேட்டை காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்த போது 10.12.2018-ந் தேதி அதிகாலை 06.45 மணிக்கு தானும்,

தன்னுடன் பணிபுரியும் 631 ராஜதுரை என்பவரும் மங்கலம்பேட்டை உதவி ஆய்வாளரும் தங்களுக்கு உதவியாக தொட்டிக்குப்பம் சுடுகாடு அருகில் குற்ற நடத்தை காரர்களை கண்காணிக்கும் போது அங்கு வந்த இரட்டை மாட்டு டயர் வண்டியை தாங்கள் நிறுத்தி தணிக்கை செய்த போது மேற்படி வண்டியில் சுமார் 1/2 யூனிட் ஆற்று மணல் இருந்ததாகவும், மேற்படி வண்டியை ஓட்டி வந்தவரை பற்றி தாங்கள் விசாரிக்க அவரது பெயர் ராஜீவ்காந்தி, வயது 28, த/பெ.ராஜேந்திரன், மெயின்ரோடு, எம்.பட்டி, விருத்தாசலம் தாலுக்கா என்றும், மணிமுத்தாற்றில் மணல் ஏற்றிவர எந்தவிதமான அரசு அனுமதியோ, உரிமமோ பெறாமல் தன் சுய லாபம் கருதி விற்பனைக்காக திருடி வந்துள்ளார் என்று தெரிய வந்ததால், கைதுக்கான காரணம் கூறி 07.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்ததாகவும், அந்த நேரத்தில், அந்த இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் முன்வராததால், தங்கள் முன்னிலையில் போலீஸ் மகசரில் 07.15 மணிக்கு டயர் வண்டியும் 1/2 யூனிட் ஆற்று மணலையும் கைப்பற்றியதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் எனவும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1. எனவும், வழக்கு சொத்து எதிரி திரும்ப இடைக்காலப் பொறுப்பில் பெற்று சென்றதை விற்றுவிட்டதாக எதிரி கூறினதாகவும், பின் எதிரி மற்றும் தடையம் சகிதம் 08.00 மணிக்கு நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தி எதிரியின் மீது குற்ற வழக்கு எண்.265/2018 இதச பிரிவு 379 மற்றும் 430 மற்றும் 21(1) மைன்ஸ் மற்றும் மினரல் ஆக்ட்டின் கீழ் வழக்கு பதிவு செய்ய

உதவியாக இருந்ததாகவும், விசாரணை அதிகாரி தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2, ராஜதுரை தனது சாட்சியத்தில் தான் தற்போது திட்டக்குடி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியில் இருந்து வருகிறதாகவும், தான் மங்கலம்பேட்டை காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்த போது 10.12.2018-ந் தேதி அதிகாலை 06.45 மணிக்கு தானும், தன்னுடன் அ.சா.1. மற்றும் உதவி ஆய்வாளராரும் தங்களுக்கு உதவியாக தொட்டிக்குப்பம் சுடுகாடு அருகில் குற்ற நடத்தைகாரர்களை கண்காணிக்கும் போது அங்கு வந்த இரட்டை மாட்டு டயர் வண்டியை தாங்கள் நிறுத்தி தணிக்கை செய்த போது மேற்படி வண்டியில் சுமார் 1/2 யூனிட் ஆற்று மணல் இருந்ததாகவும், மேற்படி வண்டியை ஓட்டி வந்தரை பற்றி தாங்கள் விசாரிக்க அவரது பெயர் ராஜீவ்காந்தி, வயது 28, த/பெ.ராஜேந்திரன், மெயின்ரோடு, எம்.பட்டி, விருத்தாசலம் தாலுக்கா எனவும், மணிமுத்தாற்றில் மணல் ஏற்றிவர எந்தவிதமாக அரசு அனுமதியோ, உரிமமோ பெறாமல் தன் சுய லாபம் கருதி விற்பனைக்காக திருடி வந்துள்ளார் எனவும் தெரிய வந்ததால், கைதுக்கான காரணம் கூறி 07.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்ததாகவும், அந்த நேரத்தில், அந்த இடத்தில், அந்நிய சாட்சிகள் யாரும் முன் வராததால் தங்கள் முன்னிலையில் போலீஸ் மகசரில் 07.15 மணிக்கு டயர் வண்டியில் 1/2 யூனிட் ஆற்றுமணலையும் கைப்பற்றியதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையது தான் எனவும், வழக்கு சொத்து எதிரி

திரும்ப இடைக்காலப் பொறுப்பில் பெற்று சென்றதை விற்றுவிட்டதாக எதிரி கூறியதாகவும், பின் எதிரி மற்றும் தடையம் சகிதம் 08.00 மணிக்கு நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தி எதிரியின் மீது கு.எண்.265/2018 இதச பிரிவுகள் 379 மற்றும் 430 மற்றும் 21(1) மைன்ஸ் மற்றும் மினரல் ஆக்ட்டின் கீழ் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்ததாகவும், விசாரணை அதிகாரி தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3. ராமலிங்கம் தனது சாட்சியத்தில் கடந்த 30.09.2024-ந் தேதியன்று பணி ஓய்வு பெற்று தற்போது விருத்தாசலத்தில் வசித்து வருகிறதாகவும், தான் மங்கலம்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது தனக்கு உதவியாக அ.சா.1. மற்றும் அ.சா.2. ஆகியோர்கள் சகிதம் 10.12.2018-ந் தேதி அதிகாரை 06.45 மணிக்கு தொட்டிக்குப்பம் சுடுகாடு அருகில் குற்ற நடத்தை காரர்களை கண்காணிக்கும் போது அங்கு வந்த இரட்டை மாட்டு டயர் வண்டியை தாங்கள் நிறுத்தி தணிக்கை செய்த போது மேற்படி வண்டியில் சுமார் 1/2 யூனிட் ஆற்று மணல் இருந்ததாகவும், மேற்படி வண்டியை ஓட்டி வந்தவரை பற்றி தாங்கள் விசாரிக்க அவரது பெயர் ராஜீவ்காந்தி, வயது 28, த/பெ.ராஜேந்திரன், மெயின் ரோடு, எம்.பட்டி, விருத்தாசலம் தாலுக்கா என்றும், மணிமுத்தாற்றில் மணல் ஏற்றிவர எந்தவிதமான அரசு அனுமதியோ, உரிமமோ பெறாமல் தன் சுய லாபம் கருதி விற்பனைக்காக திருடி வந்துள்ளார் என தெரிய வந்ததால் கைதுக்கான காரணம் கூறி 07.00

மணிக்கு கைது செய்ததாகவும், அந்த நேரத்தில், அந்த இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் முன் வராததால் உடன் வந்த போலீசார் சாட்சிகள் முன்னிலையில் போலீஸ் மகசரில் 07.15 மணிக்கு டயர் வண்டியும் 1/2 யூனிட் ஆற்று மணலையும் கைப்பற்றியதாகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கு சொத்து எதிரி திரும்ப இடைக்கால பெறுப்பில் பெற்று சென்றதை விற்றுவிட்டதாக எதிரி கூறியதாகவும், பின் எதிரி மற்றும் தடையம் சகிதம் 08.00 மணிக்கு நிலையம் வந்து எதிரியின் மீது இதச பிரிவுகள் 379 மற்றும் 430 மற்றும் 21(1) மைன்ஸ் மற்றும் மினரல் ஆக்ட்டின்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 எனவும், பின்பு எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியதாகவும், அ.சா.1. மற்றும் அ.சா.2. ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்ததாகவும். தடயத்தினை படிவம் 91-ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்ததகவும், படிவம் 91 அ.சா.ஆ.3 எனவும், கைப்பற்றிய மணலை வருவாய் வட்டாட்சியர், விருத்தாசலம் அவர்களிடம் ஒப்படைத்து சான்று பெற்றதாகவும், அந்த சான்று அ.சா.ஆ.4 எனவும், இறுதியாக தனது விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சியங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)/351 of BNSS-ன் கீழ் எடுத்துக் கூறி கேள்விக் கேட்ட போது, மேற்படி எதிரி பொய் வழக்கு என்றும், தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்று கூறியுள்ளார். எதிரியின் தரப்பில் ஆவணம் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

8. இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 379 மற்றும் 430-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

9. கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர், தனது வாதுரையில் அ.சா.1., அ.சா.2 மற்றும் அ.சா.3. ஆகியோர்கள் ரோந்து பணியில் இருந்த போது கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கடந்த 10.12.2018-ந் தேதி 06.45 மணிக்கு எதிரி ராஜீவ்காந்தி என்பவர் இரட்டை டயர் மாட்டு வண்டியில் அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் கள்ளத்தனமாக கனிம வளத்தை அழிக்கும் வகையில் ஆற்று மணலை கடத்தி வந்த போது, எதிரியை காரணம் கூறி கைது செய்து, கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி, கடத்தப்பட்ட 1/2 யூனிட் மணலை வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டு, எதிரி மீது வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின்

வாயிலாக எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமாய் வாதிட்டார்.

10. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், அரசுத்தரப்பில் கூறுவது போல் எதிரி மணல் எதுவும் கடத்தவில்லை என்றும், இவ்வழக்கில் பொது மக்களோ அல்லது வருவாய் துறை அதிகாரிகளோ, எதிரி எவ்வித அரசு அனுமதியும், உரிமமும் இன்றி மணலை தனது இரட்டை டயர் மாட்டு வண்டியில் திருடி சென்றதாக புகார் கொடுக்கப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், எதிரி டயர் மாட்டு வண்டியை அவரது வேலைக்காகவும், வாழ்வாதாரத்திற்காகவும் பயன்படுத்தி வந்தார் என்றும், 10.12.2018-ந் தேதியன்று கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மணலை வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று கூறிய மேற்படி சங்கதியிலிருந்தே, புள்ளி விவர கணக்கிற்காக (Statistical purpose) காவல் துறையினரே புகார்தாரராக இருந்து, எதிரி மீது பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றும், காவல் துறையினரே கைப்பற்றுகை மகசர் சாட்சிகளாக உள்ளனர் என்றும், வருவாய் துறையினர் புகார் அளிக்காத பட்சத்தில், எதிரி தான் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி

நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமாய் வாதிட்டார்.

*11.* இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. இவ்வழக்கில் முன்னிடப்பட்ட அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும், சான்று பொருட்களையும் நன்கு பரிசீலிக்கப்பட்டன.

*12.* அரசுத்தரப்பு வழக்கானது, *10.12.2018*-ந் தேதியன்று அதிகாலை *06.45* மணிக்கு ஆற்று மணலை எதிரி ராஜீவ்காந்தி, த/பெ.ராஜேந்திரன் என்பவர் இரட்டை மாட்டு டயர் வண்டியில் அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் கள்ளத்தனமாக இயற்கை வள ஆதாரத்தை கெடுத்து அரசுக்கு நஷ்டமும் ஏற்படும் வகையில் ஆற்று மணலை கடத்தி வந்து குற்றம் புரிந்துள்ளார் என்பதேயாகும். இயற்கை வளங்கள் மற்றும் வாழ்வாதாரத்தில் ஒன்றான நீர்வளத்திற்கு அழிம்பு ஏற்படும் வகையில், ஒரு கைப்பையிலோ அல்லது ஒரு மூட்டையிலோ அல்லது அதிகப்படியான *1/2* யூனிட் அளவிலோ மணலை திருடிச் செல்வது குற்றமேயாகும். இருந்த போதிலும், இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரி மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளனவா? என்பதை பரிசீலனை செய்து பார்க்க வேண்டும்.

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் - *1957*-ன்படி

***"பெரிய கனிமங்கள் மற்றும் சிறு கனிமங்களைப் பொறுத்தவரை, மாவட்ட ஆட்சியர் மற்றும் ஆர்.டி.ஓ./துணை ஆட்சியர்களுக்கு சட்டத்தின் பிரிவு 22-ன் கீழ் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் காவல் ஆய்வாளர் மற்றும் மாவட்ட வன அலுவலர் பதவிக்குக் குறையாத அதிகாரிகள் தகுதி வாய்ந்த அதிகார வரம்பு நீதிமன்றத்திற்கு எழுத்துப்பூர்வமாக புகார் அளிக்கலாம். சட்டத்தின் பிரிவு 21(4), சட்டத்தின் கீழ் கனிமங்கள், கருவிகள், வாகனங்கள் போன்றவற்றை பறிமுதல் செய்ய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளான துணை தாசில்தார், புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர், உதவி புவியியலாளர்கள், சிறப்பு தாசில்தார் (சுரங்கங்கள்), சிறப்பு துணை தாசில்தார் (சுரங்கங்கள்) மற்றும் காவல் ஆய்வாளர் பதவிக்குக் குறையாத காவல்துறை பணியாளர்கள் ஆவர்"***

13. இவ்வழக்கினை பரிசீலனை செய்கையில், காவல் ஆய்வாளர் பதவிக்கு குறைவான பதவியில் உள்ள அ.சா.3. காவல் உதவி ஆய்வாளர் தான் புகார்தாரராக இருந்து, வழக்கினை பதிவு செய்து, புலன் விசாரணை செய்து, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். அ.சா.3. காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் ரோந்து பணியில் இருந்த போது, அ.சா.1 மற்றும் அ.சா.2. ஆகியோருடன் ***<u>எந்த இடத்திற்கு எந்த வகையான ரோந்து பணிக்கு சென்றனர்</u>*** என்பது குறித்து தெளிவாக எந்த சாட்சியும் சாட்சியம்

அளிக்கவில்லை மற்றும் சான்றாவணங்கள் தாக்கல செய்யவும் இல்லை. மேலும் அ.சா.3. தனது குறுக்கு விசாரணையில் இந்த வழக்கு சம்பந்தமாக மணல் எடுத்தால் பாதிப்பு ஏற்பட்டதாக பொது மக்கள் யாரும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை எனவும், அ.சா.1. மற்றும் அ.சா.2. ஆகிய இருவரும் தனக்கு கீழ் பணிபுரியும் காவல் நிலைய சாட்சிகள் என்றால் சரிதான் எனவும், மணல் எடுத்தது அரசு இடமா அல்லது தனியார் இடமா என்ற சர்வே எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் ஆற்றில் மணல் எடுத்தார் எனவும், 1/2 யூனிட் மணல் என்று எப்படி அளவீடு செய்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி தான் எனவும், எதிரி மணல் அள்ளியதை நேரடியாக பார்த்ததாக பொது மக்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான் எனவும், இந்த வழக்கில் கிராம நிர்வாக அலுவலரை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான் எனவும், எதிரியை கைது செய்த இடம் பொது மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான் எனவும், வழக்கில் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும் குறிப்பிட்டு தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

14. மேலும் இவ்வழக்கில் அ.சா.3. உதவி ஆய்வாளர் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிமன்றம் Muthu Vs. District Collector - என்ற தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி வருவாய்த்துறை அதிகாரிகளிடமிருந்து எவ்வித புகாரும் பெறப்படவில்லை. மேலும், மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமனற்ம்

Crl.O.P.No.7104/2025 and Crl.M.P.No.4531/2025 dated 12.03.2025, Tamizhazhagan Vs. The State Rep. By Sub Inspector of Police, Kammapuram P.S., Cuddalore District and another என்ற வழக்கில் "The complainant cannot be the Investigating Officer" என்ற முன் தீர்ப்பில் புகார்தாரரே புலனாய்வு அதிகாரியாக இருக்க முடியாது என்று கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட சங்கதிகளை பார்க்கும் போது அ.சா.3. காவல் உதவி ஆய்வாளர், சட்டத்திற்கு முரணாக தானே புகார்தாரராக இருந்து, தானே வழக்கு பதிவு செய்துக் கொண்டு, தானே புலன் விசாரணை மேற்கொண்டு, எதிரி மீது எவ்வித முகாந்திரமும் இன்றி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது காண முடிகிறது. எனவே, மேற்படி அரசுத்தரப்பில் முன்னிடப்பட்ட சாட்சிய, சான்றாவணங்களில் இருந்து எதிரி மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை இதச பிரிவுகள் 379 மற்றும் 430-ன் கீழ் குற்றவாளி அல்லர் என்று தீர்மானித்து, எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யத்தக்கவர் என்றும், இவ்வழக்கில் இவ்வாறாக பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

15. முடிவாக, எதிரியை இதச பிரிவுகள் 379 மற்றும் 430-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை பிரிவு 258(1) of BNSS-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி இவ்வழக்கில் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

வழக்குச் சொத்தான இரட்டை மாட்டு டயர் வண்டியை எற்கனவே மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற உத்தரவு எண்.Writ Petition No.15704/2019 நாள் 10.06.2019-ந் தேதியிட்ட உத்தரவின்படி உரிமையாளருக்கு இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், அவரே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், இவ்வழக்கில் அவர் எழுதிக் கொடுத்த பிணைமுறி இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 1/2 யூனிட் மணல் ஏற்கனவே, வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி 1/2 யூனிட் மணலை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அரசுக்கு ஆதாயம் செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில்அவையறிய பகரப்பட்டது.

SUBATHIRA DEVI G

Digitally signed by SUBATHIRA DEVI G
Date: 2026.03.27 18:43:09 +0400

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
கடலூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

அ.சா.1. திரு. தென்எழிலன், முதல் நிலை காவலர்.

அ.சா.2. திரு. ராஜதுரை, தலைமைக் காவலர்.

அ.சா.3 திரு. ராமலிங்கம், உதவி ஆய்வாளர் (ஓய்வு).

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.*1.* | *10.12.2018* | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.*2.* | *10.12.2018* | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.*3.* | *10.12.2018* | படிவம்-*91* |
| அ.சா.ஆ.*4.* | -- | வருவாய் வட்டாட்சியர், விருத்தாசலம் அவர்கள் வழங்கிய ஒப்படைப்பு சான்று. |

**<u>அரசுத்தரப்பு சான்று பொருள்</u>** - இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்று பொருள்</u>** - இல்லை

SUBATHIRA DEVI G

Digitally signed by SUBATHIRA DEVI G
Date: 2026.03.27 18:43:20 +0400

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
கடலூர்.

வரைவு/சீரான தீர்ப்புரை

அமர்வு வழக்கு எண்.*171/2022*

நாள் - *27.03.2026*